# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.5.4.B

எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

1) கரிகாலன் ஒரு நியாயவிலைக் கடையின் பொறுப்பாளர். அவர் தன்னிடம் இருப்பு உள்ள 2,500 கி.கி கோதுமையை அப்பகுதியில் உள்ள 1,000 குடும்பங்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார் எனில், ஒவ்வொரு குடும்பமும் பெறும் கோதுமையின் அளவு எவ்வளவு?

கரிகாலனிடம் இருப்பு உள்ள கோதுமையின் அளவு = 2,500 கி.கி

அப்பகுதியில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை = 1,000

∴ அப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பெறும் கோதுமையின் அளவு = 2500 ÷ 1000 = 2.5 கி.கி

∴ அப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பெறும் கோதுமையின் அளவு **2.5 கி.கி** ஆகும்.

2) 100 மாணவர்களுக்கு சீருடைத் தைப்பதற்கு 462.1 மீ துணி போதுமானது எனில், ஒருவருக்கு சீருடை தைக்க தேவைப்படும் துணியின் நீளம் எவ்வளவு?

100 மாணவர்களுக்கு சீருடைத் தைக்கப் போதுமான துணியின் நீளம் = 462.1 மீ

∴ ஒருவருக்கு சீருடை தைக்க தேவைப்படும் துணியின் நீளம் = 462.1 ÷ 100 = 4.621 மீ

∴ ஒருவருக்கு சீருடை தைக்க தேவைப்படும் துணியின் நீளம் **4.621 மீ** ஆகும்.

3) 100 கூடைகளில் மொத்தம் 1360.75 கி.கி மாம்பழங்கள் வைக்கப்பட்டுள்ளன எனில், ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் அளவு எவ்வளவு? மேலும், ஒரு கி.கி மாம்பழத்தின் விலை ₹45 எனில், ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் விலையைக் கணக்கிடுக.

ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் அளவு → ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் விலை

100 கூடைகளில் உள்ள மாம்பழங்களின் அளவு = 1360.75 கி.கி

∴ ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் அளவு = 1360.75 ÷ 100 = 13.6075 கி.கி

ஒரு கிலோகிராம் மாம்பழத்தின் விலை = ₹45

∴ ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் விலை = 13.6075 × 45 = ₹612.3375

= 612.3375 ≃ ₹612 (∵ அருகில் உள்ள முழு எண்ணிற்கு முழுதாக்கியதால்)

|   |   |
|---|---|
|   | 1 3.6 0 7 5 |
| × | 4 5 |
|   | 6 8 0 3 7 5 |
|   | 5 4 4 3 0 0 |
|   | 6 1 2.3 3 7 5 |

∴ ஒரு கூடையில் உள்ள மாம்பழங்களின் அளவு மற்றும் அதன் விலை முறையே **13.6075 கி.கி** மற்றும் **₹612** ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/If4K5a1pk9U


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:50 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**